***கவனிக்க.-*** 04.09.2025 ஆம் திகதிய 2453 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2454 - 2025 සැප්තැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2025.09.12**

2454 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 732 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | 733 |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | - | | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | | | |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

731 - B82719 - 5403 (2025/09)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**மாத்தறை மாநகர சபை**

1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 71(1) ஆம் உறுப்புரையின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்

1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 71(1) ஆம் உறுப்புரையின் கீழ் தென் மாகாண சபையின் மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை மாநகர சபையினால் 2010.12.24 ஆந் திகதிய மற்றும் 1686 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட இசடீன் நகரின் மீரா வீதி, கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டு உள்ள விதத்தில் திருத்தம் செய்து குறித்த மீரா வீதியை மீளப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது இதன் மூலம் பிரகடனப்படுத்தப்படுகிறது.

இது தொடர்பாக பிரதேசத்தின் பொது மக்கள் மூலம் அல்லது வீதிகளுக்கு உரிய காணிகளின் உரிமையாளராக உரிமை கோரும் தரப்பினர்களால் அல்லது ஏதேனும் விரோதங்கள் தெரிவிப்பதாயின் இந்த அறிவித்தல் வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட திகதி முதல் ஒரு மாதத்துக்குள் தங்களுடைய உரிமையை உறுதிப்படுத்துவதற்காக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அதிகாரத்திற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

இந்தக் கால இடைவெளியினுள் ஏதேனும் விரோதங்கள் முன் வைக்கப்படாத போது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அமீனா வீதி மாத்தறை மாநகர சபைக்கு சொந்தமான ஒரு பாதையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நிர்வகிக்கப்படும் என்பதை பொது மக்களின் கவனத்திற்காக இதன் மூலம் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

நெலும் ஏ. கமகே,
நகர ஆளுநர்,
மாநகர சபை,
மாத்தறை.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2025, யூன் 25.

**அட்டவணை**

அமீனா வீதி

| | *பாதையின் பெயர்* | *பாதையின் தொடக்கம்* | *பாதையின் முடிவு* | *தரம்* | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | *தார்* | | *கொன்கிறீட்* | | *காபட்* | | *களிமண்* | |
| | | | | *நீளம்* | *அகலம்* | *நீளம்* | *அகலம்* | *நீளம்* | *அகலம்* | *நீளம்* | *அகலம்* |
| 1 | மீரா வீதி | இசடீன் நகர் மீரா வீதி | ஹித்தெடிய மேற்கு குருந்துவத்த வீதி | | | | | 36.3m | 6.40m | 16.2m | 6.0m |

# நானாவித அறிவித்தல்கள்

**கிண்ணியா பிரதேச சபை**

கற்கள், மணல், கிரவல் அள்ளும் வாகனங்களுக்கு வீதிப் பராமரிப்புக் கட்டணம் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 70(1), (2) ஆம் பிரிவுகளின் கீழ் பிரதேச சபைகளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக கிண்ணியா பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் கீழ்க் காணும் தேவைகளுக்காக பயன்படுத்துகின்ற வாகனங்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் கட்டணம் நியமித்து 2025.08.01 ஆந் திகதி தொடக்கம் அறவிடுவதென 13 ஆம் இலக்க 2025.07.30 ஆந் திகதிய மாதாந்த சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய இத்தால் அறிவிக்கின்றேன்.

ஏ. ஆர். எம். அஸ்மி,
தவிசாளர்,
பிரதேச சபை,
கிண்ணியா.

பிரதேச சபை அலுவலகம்,
கச்சக்கொடித்தீவு,
கிண்ணியா,
2025, ஓகத்து 18.

**அட்டவணை**

| | *ரூ. சதம்* |
|---|---|
| கிரவல் கியூப் ஒன்றிற்கு | 300.00 |
| மணல் கியூப் ஒன்றிற்கு | 350.00 |
| கருங்கல் கியூப் ஒன்றிற்கு | 300.00 |

09 - 83

---

**மண்முனை மேற்கு பிரதேச சபை**

கால்நடைகள் விற்பனை நிலையம் அமைத்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 8 (1) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி மண்முனை மேற்கு பிரதேச சபையினால் 2025.07.17 ஆம் திகதிய 46/2025 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளமை இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

த. கோபாலபிள்ளை,
தவிசாளர்,
மண்முனை மேற்கு பிரதேச சபை.

மண்முனை மேற்கு பிரதேச சபை,
வவுணதீவு,
2025, ஓகத்து 18.

**தீர்மானம்**

"1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களில் கால்நடைகள் விற்பனை நிலையங்களை அமைத்து (சந்தைகள்) விற்பனை செய்யப்படும் கால்நடைகளுக்கு உரிமையாளர்களிடம்

இருந்து பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை விதித்து அறவிடுவதென மண்முனை மேற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

**சேவைக் கட்டணங்கள்**

1. மாடு ஒன்று விற்பனை செய்வதற்கான கட்டணம் ரூபா. 1000.00
2. ஆடு ஒன்று விற்பனை செய்வதற்கான கட்டணம் ரூபா. 500.00

09- 128

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.